பணிபுரியும் பெண்கள் விடுதிகள் நடத்தத் தனியார் தொண்டு நிறுவனங்களும் ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்காக மாநில அரசின் பரிந்துரையின் பேரில், விடுதிக் கட்டிடத்தின் கட்டுமான/விரிவாக்க மதிப்பீட்டுச் செலவில் 75 சதவீதம் வரை மத்திய அரசு மானியம் வழங்குகிறது. மேலும் மத்திய அரசின் உதவிக்குக் கூடுதலாக மாநில அரசும் 15 சதவீதம் அல்லது 35,000 ரூபாய், இவற்றில் எது குறைவோ அத்தொகையை தனியார் நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கி வருகிறது. நான், இதுப்பற்றி சென்னை நகர கார்ப்பரேஷன் சிறப்பு அதிகாரியிடம் இப்படியொரு இல்லம் அமைக்கப்படவேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதுபற்றிய ஆலோசனை நடந்து வருகிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பெண்களுக்காக விடுதி கட்டியிருப்பதாகவும், கட்டப் போவதாகவும் சொன்னார்கள். ஆனால் ஆண்களுக்கும் அதே நிலை இருக்கிறது. அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, எனது இலாக்கா பெண்களைப்பற்றிய இலாக்கா. கேள்வி இடம் மாறி வந்திருக்கிறது.

Care-homes for children of employed women.

* 78 Q.— THIRU S. M. VASAN: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether any financial assistance is being given by the Government to private sector undertakings for running care homes for the children of employed women; and

(*b*) whether any financial assistance is being received from the Central Government or from foreign countries for the purpose?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :

(அ) பணிபுரியும் பெண்களின் குழந்தைகளுக்கென்று காப்பகங்கள் நடத்துவதற்கு தனியார் துறை நிறுவனங்களுக்கு மாநில அரசு நிதி உதவி அளிக்கவில்லை.

(ஆ) இதற்காக மத்திய அரசிடமிருந்தோ மற்றும் அயல் நாட்டிலிருந்தோ நிதி உதவி எதுவும் பெறப்படவில்லை. ஆனால் 1977–78 முதல் மத்திய சமூக நல வாரியம் 90 சதவீத செலவை மானியமாக குழந்தைகள் காப்பகங்களுக்கு வழங்கி வருகிறது. இதன்படி 1978–79 ஆண்டுக்கென ரூ. 2,08,472 மத்திய சமூக நல வாரியம் மானியமாக வழங்கியுள்ளது.

1979 பிப்ரவரி 17]

திரு. சீ. மு. வாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதன்மூலம் பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கம்.

*வினா எண் 79— திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்க விற்பனை அதிகாரிகள், மானேஜர்கள், உதவி மானேஜர்கள் யாராவது பணம் கையாடல் செய்துள்ளார்களா?

(ஆ) எவ்வளவு தொகை கையாடல் செய்யப்பட்டது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :

(அ) & (ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் தக்கோலம் விற்பனை நிலையத்தில் 30–6–77-ல் ரூ. 25,129.84 அளவிற்கு சரக்கு இருப்பு குறைவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தவிர இவ்விற்பனை நிலையத்தில் கடன் விற்பனை வசூல் செய்யப்பட்ட தொகையிலும் ரூ. 16,502.95 குறைவாக இருக்கிறது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 10.10]

திரு. எஸ். ஜே. இராமசாமி : முதலிலே ரூ. 26,000, அதற்குப் பிறகு ரூ. 16,000 ஆக, ரூ. 42,000 மோசடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் இரண்டு விதமாகச் சொன்னார்கள், ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அதை எப்படி வசூல் செய்யப் போகிறார்கள்? வசூலிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது? கணக்கு தணிக்கை செய்த அதிகாரிகள் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இப்படியே விட்டால் சொஸைட்டி உருப்படுமா? யார், யார் தவறு செய்திருக்கிறார்கள்?